தினமலர்
சென்னை | ஞாயிறு | 12.4.2015

# 'ஹீமோபீலியா' பாதித்தவருக்கு மியாட் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை

சென்னை, ஏப். 12–

'ஹீமோபீலியா' எனும், ரத்த இழப்பு நோயால் பாதிக்கப்பட்டவருக்கு, சென்னை, மியாட் மருத்துவமனையில், இதய பெருந்தமனி நாள நெளிவு மற்றும் பெருந்தமனி வால்வு சரி செய்யும் அறுவை சிகிச்சைகள் செய்து, குணப்படுத்தினர்.

கேரளாவைச் சேர்ந்தவர், பினு, 38. இவர், ஏறுமுக பெருந்தமனி நாள நெளிவு மற்றும் பெருந்தமனி வால்வு கசிவால் பாதிக்கப்பட்டு, சென்னை மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ரத்த இழப்பு எனப்படும், 'ஹீமோபீலியா' பாதிப்பும் அவருக்கு இருந்தது. டாக்டர் பாஷா தலைமையிலான குழு, சிக்கலான அறுவை சிகிச்சை செய்து, அவரை காப்பாற்றி உள்ளது.



■ சிக்கலான அறுவை சிகிச்சைக்கு பின் குணமடைந்த பினுவுடன், சிகிச்சை அளித்த டாக்டர்கள் செழியன் சுபாஷ், பாஷா, மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், 'இந்திய ஹீமோபீலியா பெடரேஷன்' முன்னாள் துணைத் தலைவர் உஷா பார்த்தசாரதி.

இதுகுறித்து, டாக்டர் பாஷா கூறியதாவது:

பினுவின், ரத்த நாள நெளிவு பெரிதாகி, உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தது. சிறு அறுவை சிகிச்சை செய்தாலே, தொடர் ரத்த இழப்பால் உயிர் இழக்கும் நிலை இருந்ததால், அறுவை சிகிச்சை மிக சவாலாகிப் போனது.

உலோகம் கொண்ட செயற்கை வால்வை பயன்படுத்தினால், ஆயுள் முழுவதும், மருந்து உட்கொள்ளவேண்டும்; ரத்தப் போக்கால் இறக்கவும் வாய்ப்பு உண்டு. எனவே, அவரது சொந்த வால்வை சீரமைத்து பயன்படுத்த முடிவு செய்தோம்.

தோலை வெட்டத் துவங்கும் நிலையில் இருந்தே, ரத்தப் போக்கு ஏற்படும் என, எதிர் பார்த்தோம். அடுத்த நிலைக்கு செல்லும் முன், ரத்தப்போக்கு அமைவிடங்களை நிறுத்த வேண்டி இருந்தது.

அதற்காக தொடர்ந்து, ரத்த உறைவுக்கான மருந்துகளை கொடுத்தோம். நோயாளியின் இதயம், நுரையீரல் இயந்திரத்தில் இணைக்கப்பட்டு, இதயத் துடிப்பை நிறுத்திய பிறகு, ஏறுமுக பெருந்தமனிக்கு பதிலாக, செயற்கை உறுப்பு மாற்றினோம்.

நோயாளின் சொந்த வால்வு சரி செய்யப்பட்டு, மீண்டும் பொருத்தப்பட்டது. பின், கொரோனரி தமனிகள் இணைக்கப்பட்டன.

சிகிச்சை முடிந்து, 15 நாட்கள் ஆகிறது. அவர் பூரண நலம் பெற்றுள்ளார். 'ஹீமோபீலியா' பாதிப்புள்ள ஒருவருக்கு, இதய அறுவை சிகிச்சை இதற்கு முன் செய்திருந்தாலும், இதுபோன்ற சிக்கலான இதய அறுவை சிகிச்சை செய்வது, உலக அளவில் இதுவே முதல் முறை.

இவ்வாறு, அவர் கூறினார்.

திறம்படச் செயல்பட்ட டாக்டர்கள் குழுவை, மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ் பாராட்டினார்.